## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.................................................. | மாவட்டம்...................................................... |
| கிராமம்.......................................................... | தந்தை /கணவர் பெயர்......................................... |
| தாலுக்கா......................................................... | தொழில்............................................................... |

-----------------------------------------------------------------------------------------------------------

**LAOP No. 148/2026, LAOP No. 149/2026, LAOP No. 150/2026,**
**LAOP No. 151/2026, LAOP No. 152/2026, LAOP No. 153/2026,**
**LAOP No. 154/2026, LAOP No. 155/2026, LAOP No. 156/2026,**

# 25.03.2026

**எ.ம.த.சா.1 - திருமதி. சாந்தி, க/பெ. அண்ணாமலை**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு வட்டாட்சியராக திருவள்ளூர் நெடுஞ்சாலைத்துறை நில எடுப்பு துறை அலகு-3ல் பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் தாக்கல் செய்ய ஆவணங்கள் எதுவுமில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

NH 205 மற்றும் SH 58 ஆகிய இரண்டு நெடுஞ்சாலைகளை இணைக்கும் வகையில் புறவழிசாலை அமைப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலங்கள் தமிழ்நாடு மற்றும் ஆந்திராவிற்கு வணிக போக்குவரத்திற்கு சாலை அமைப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஆர்ஜிதம்

செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களும் திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட நிலம் என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் திருத்தணி ரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் திருத்தணி முருகன் கோவில் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் TI Diamond Groups of Company உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கம்பெனி 1.6 கிமீ தொலைவிற்குள் இல்லை. சிறிது தொலைவில் உள்ளது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் GRT பொறியியல் கல்லூரில் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களிலிருந்து 1.6 கிமீ தொலைவிற்குள் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு புதிய நில எடுப்பு சட்டத்தின் விதிமுறைகளை பின்பற்றாமல் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட நிலங்கள் என்பதால் அதிகப்படியான இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் நில எடுப்பு செய்யப்பட்ட பகுதியிலிருந்து 1.6 கி.மீ தொலைவிற்குள் GRT 3 Star hotel உள்ளது என்றால் சரிதான். நாங்கள் நில எடுப்பு செய்யப்பட்ட பகுதியிலிருந்து 1.6 கி.மீ தொலைவிற்குள் மகிஷாசுர அம்மன் கோவில் உள்ளது என்றால் அது 1.6 கி.மீ அப்பால் உள்ளது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.